RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s174

OPEN ACCESS

# நெய்தல் நில மக்களின் விளையாட்டுகள்

**க. மலர்விழி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல், தமிழ்நாடு, இந்தியா

# The Neithal Land People's Games

**K. Malarvizhi** [a, *]

[a] Department of Tamil, Mother Teresa Women's University, kodaikanal-624101, Tamil Nadu, India

* Corresponding Author: umadhinesh78@gmail.com

Received: 23-03-2022
Revised: 08-10-2022
Accepted: 25-10-2022
Published: 17-12-2022

**ABSTRACT**

Though the people of Neithal are engaged in a difficult occupation like fishing, they have given more importance to sports. That's why they discovered something called entertainment and turned it into a game and started playing it. Sports are not only a means of ensuring physical well-being but are also a great tool for mental happiness and socializing Men, women, and children played this game in a variety of ways. The counting game is where girls used to count boats, lanterns, etc. from home. In the case of amulet dancing, too, the women, both of whom played by rolling the amulets on the beach sand. In the water game, both men and women played for the sake of competition and entertainment with water as a field. In the case of dice playing, too, the women, both of whom played by rolling the dice on the beach sand. In the water game, both men and women played for the sake of competition and entertainment with water as a field. In the swing play, they made a board with the horns of sharks and tied the paper on either side with the falls and played the swing. In playing with crabs, women hold and swing the crabs called alavan in their hands. Animal fighting is a sport in which men compete with goats, goats against goats, roosters against roosters, and play the bet. In the game of dolls, women make dolls with raw ore and play with them as if they are their children. In the "Orai" game, the girls would run on the beach sand wearing sounding anklets and play. In the silt game, big flowers are plucked and played in the fields and in the sand. Sand play is a game of building small houses on the sands of the beach.

**Keywords:** Sports, Entertainment, Count Boats, Lanterns, Amulet Dancing, Water Game.

## முன்னுரை

மனிதன் எப்பொழுதுமே தொடர்ந்து வேலை செய்து கொண்டிருப்பது கிடையாது. சிறிது நேரம் வேலை செய்த பிறகு சிறிது ஓய்வு தேவைப்படுகிறது. ஒவ்வொருவரின் உடலுழைப்புகளும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. எனவே உழைப்புக்கும் ஓய்வுக்கும் இடையே பொழுதுபோக்கு என்பது மனிதனுக்கு அடிப்படையான ஒன்று ஆகும். இதற்கேற்றார் போல் மனிதன் தானாக விளைவித்துக் கொண்டும், படைத்துக் கொண்டும் பொழுதைப் போக்கத் தொடங்கினான் அவ்வாறு உருவாக்கிக்கொண்டவையே விளையாட்டுகள் ஆகும். ஒரு நாட்டின் இயற்கை அமைப்பு, சூழ்நிலை, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைப் பொறுத்து விளையாட்டுக்களும் வேறுபடும். இப்படிப்பட்ட நெய்தல் நிலத்தவரின் விளையாட்டுகளை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றன.

## விளையாட்டு

உடல் வளத்தை உறுதி செய்வது, மேலோங்கச் செய்வது விளையாட்டு ஆகும். அப்படிப்பட்ட விளையாட்டைத் தனி ஒரு மனிதனால் விளையாட முடியாது. குறைந்தது இரண்டு பேர்கள் அல்லது பலர் கூடியாடுதல் விளையாட்டு ஆகும். விளையாட்டு என்பது மன மகிழ்ச்சிக்கும் கூடிப் பழகுவதற்கும் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிறப்பான கருவியாகும். குழந்தைகள் ஆயமொடு விளையாடினார்கள் என்பதைச் சங்க இலக்கிய செய்யுட்கள் உணர்த்துகின்றன. விளையாட்டைப் பற்றிப் பல அறிஞர்கள் பலவிதமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். தொல்காப்பியர் தனது நூற்பா ஒன்றில் விளையாட்டால் உவகை கிடைக்கும் என்பதை,

"செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று

அல்லல் நீத்த உவகை நான்கே"

என்ற பாடலடிகள் இன்பம் தருவதே விளையாட்டின் முக்கியமான நோக்கம் என்பதனையும், இன்பம் விளைவிப்பதையே விளையாட்டுக்கள் நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதையும் விளக்குகிறது (Subramanian, 2003).

"விளையாட்டு பொழுதுபோக்கிற்காகவும், திறமையை வெளிப்படுத்தும் விதமாகவும் நிகழ்த்தப்படும் விதிமுறைகளை உடைய செயல்பாடு, ஆட்டம், Game Sports, என்ற பொருளைத் தருவதாக க்ரியாவின் தமிழ் அகராதி கூறுகிறது.

அ. அருணாச்சலம் என்பவர் "விளையாட்டு என்ற சொல்லில் 'விளை' என்பதன் பொருள் விருப்பம் ஆகும். விருப்பமுடன் ஆடும் ஆட்டம் 'விளையாட்டு' என வழங்கப்பட்டது. விளையாட்டு உணர்வு மனிதனுக்கு மட்டும் உரியதல்ல, விலங்கினங்களும், பறவையினங்களும் விளையாட்டில் விருப்பமுடன் ஈடுபடுகின்றன. விளையாட்டினால் மன மகிழ்ச்சியும், உடலுக்குப் புத்துணர்வும் கிடைப்பதினால் எல்லா உயிர்களும் மகிழ்ச்சியுடன் இதில் ஈடுபடுகின்றன" என விளக்கியுள்ளார் (Arunachalam, 1976).

"வீரத்தை வளர்க்க பயத்தை விரட்ட நம்பிக்கையை ஊட்ட நண்பர்களைப் பெருக்க, பொழுது போக்க, வரவேற்க, முரண்பாட்டை உணர்த்த, வாழ்க்கையினையும். தொழிலையும் எதிரொலிக்க எனப் பல நிலைகளில் விளையாட்டுக்கள் தோன்றலாயின" என்று சி.சிவகாமசுந்தரி கூறியுள்ளார் (Sivagama Sundari, 2005). விளையாட்டு என்பது உடலை மட்டுமல்லாது அறிவையும் வளர்க்க உதவுகின்றன. நெய்தலில் கடற்கரைச் சூழலில் வாழும் ஆடவர்களும், பெண்களும் பல விதமான விளையாட்டுக்களை விளையாடியுள்ளனர். இதில் எண்ணி விளையாடுதல், தாயக்கட்டம் ஆடல், நீர் விளையாட்டு, ஊசல் விளையாட்டு அலவன் ஆட்டம், விலங்கு மோதல், விளையாட்டு போன்ற விளையாட்டுக்களைப் பெண்களும்' ஆடவர்களும் பாவை விளையாட்டு, ஓரை விளையாட்டு, வண்டல் விளையாட்டு, சிற்றில் இழைத்தல் என குழந்தைகளும் விளையாடி மகிழ்ந்துள்ளனர்.

## எண்ணி விளையாடல்

நெய்தல் நில மகளிர் அவரவர் இல்லத்தில் இருந்தவாறே படகுகள், விளக்குப் பந்தங்கள் போன்றவற்றை எண்ணி எண்ணி விளையாடுவார்கள். இது ஒன்று, இரண்டு என விரல் விட்டு எண்ணி விளையாடும் விளையாட்டாகும். நற்றிணையில்,

"மனையிலிருந்து

இருங்கழி தொழவும் பனித்தலை பரதவர்

திண்திமில் விளக்கம் என்னும்"

என்னும் பாடல் வரிகள் இரவில் மீன்பிடிக்கச் சென்று இருக்கும் பரதவர்களின் படகுகளில் ஒளிரும் விளக்குகளை பருவ பெண்கள் தங்கள் இல்லத்தில் இருந்து எண்ணி விளையாடியுள்ளனர்

(Subramanian, 2009). இதன் மூலம் அவர்களின் பொழுதுபோக்கும் உணர்வுகள் மேலோங்கி இருப்பதும், அவர்களின் வருகையை எதிர்பார்த்து க் காத்திருக்கும் உணர்வும் வெளிப்படுகிறது.

அதே கருத்தை "புலால் வீசும் மீன்களை உலர்த்தி பறவைகளை விரட்டும் பரதவப் பெண்கள், அருகில் குன்றெனக் கிடக்கும் வெள்ளுப்புக்குவியலில் சரியான பக்கத்து ஏறிநின்று கடலில் இருக்கும் படகுகளைச் சுற்றி இது தந்தை திமில் அது எம் தந்தை திமில் எனக்கூறி கடல் வேட்டையாடும் தம் உறவினரின் படகுகளை எண்ணி வேடிக்கையாக விளையாடுவார்" என்று தி.கண்ணப்பன் கூறுகிறார் (Muthu Kannappan, 2005).

## தாயக்கட்டம் ஆடுதல்

பரதவ மகளிர் கடற்கரை மணலில் கோடு கிழித்து தாயக்கட்டம் என்னும் ஆட்டம் ஆடுவர். இதனைச் சொக்கட்டான் என்றும் கூறுவர். இவ்விளையாட்டில் புள்ளிகள் வைத்த காய்கள் சதுர கருவிகள் போன்றவை தேவைப்படும் ஒன்று, இரண்டு, மூன்று என 3 பக்கங்களிலும் குறிக்கப்பட்டிருக்கும் இதில் ஒன்று விழுந்தால் மட்டும் அது தாயம் என்றும் தாயம் விழுந்தால் மட்டும் மீண்டும் உருட்டும் வாய்ப்பும் கிடைக்கும். இவ்விளையாட்டுக்குப் பயன்படும் கருவியை இலக்கியத்தில் "கவறு" என்று அழைப்பர்.

கலித்தொகையில் நெய்தல் நில மகளிர் கடற்கரை மணலில் தாயக்கட்டம் ஆடிவிட்டு தேய்ந்துபோன கட்டையை அப்படியே விட்டுச் சென்றனர். தண்ணீர் வடிய அங்கு வலையில் இருக்கும் நண்டுகள் வெளியில் வந்து அங்கு கிடக்கும் கட்டையை பற்றிக் கொண்டு அங்குமிங்கும் உருட்டி விளையாடும் என்பதனை,

"இவர் திமில் எறி திரை ஈண்டு வந்து அழைத்தக்கால்

உபரி நீர் உயர் எக்கர் அலவன் ஆடு அலை வரி

தவலில் தன் கழகத்துக் தவிராது வட்டி எப்ப

கவறு உற்ற வடு வேய்க்கும் காமரு பூங் கடல் சேர்ப்ப"

கலித்தொகையின் இப்பாடல் வரிகளால் அறியமுடிகிறது. இதன் மூலம் பரதவ மகளிர் கடற்கரை மணலில் தாயக்கட்டம் ஆடிய செய்தி சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளதையும் அறியலாம் (Subramanian, 2005).

## நீர் விளையாட்டு

நீர் விளையாட்டு என்பது நீரினை களமாகக் கொண்டு பகல் பொழுதில் ஆண், பெண் இருபாலரும் விளையாடுவது ஆகும் இதனைப் பொழுதுபோக்கிற்காகவும், போட்டிக்காகவும் விளையாடினர். சங்க காலத்தில் நீர் விளையாட்டு என்பதை ஓர் விழாவாகவும் கொண்டாடி உள்ளனர். என்பதை,

"நின் மலைப் பிறந்து நின் கடல் மண்டும்

மலி புனல் மரக்கலங்களையுடைய பரதவர்கள்

நிழல்தரும் தீம் நீர் நிலவின்"

என்ற பதிற்றுப்பத்தின் பாடலடிகள் புலனாக்குகின்றன (Subramanian, 2005). "மரங்கள் பல்வகை இசைக் கருவிகளால் எழுப்பும் ஓசையும், பரதவ சிறுவர்கள் கடல்நீரில் துள்ளி விளையாடும் போது எழுப்பும் ஓசையும், கடல் அலைகளின் ஓசையும், நெய்தல் நிலப் பகுதியில் பரவியிருக்கும், இது சிறுவர்களின் மகிழ்வுத்துள்ளலின் வெளிப்பாடு ஆகும். என்று நீர் விளையாட்டைப் பற்றி விளக்கம் கொடுத்துள்ளார் (Subramanian, 2005). நற்றிணையில்,

"நீரலை கலை நிலை இய கூலி கூழை வடியா

சா வயிறு ஐயப்ப உடனே

ஓரை மகளிரும் ஊராய் தினரே"

என்ற பாடல் வரிகள் அச்சம் தரும் கடலில் உயர்ந்து வரும் கடல் அலைகளின் நடுவே துணிச்சலுடன் பாய்ந்து விளையாடும் பெண்கள் என்றும், அவர்கள் பலவகையான மலர்களைச் சூட்டி பின்பு விளையாடும்போது அதைக் கழற்றி எறிந்து, நீரில் கலைந்த கூந்தலைப் பிடித்து நீரை வடித்துத் தளர்ந்தவாறே ஒருசேரக் கூடி தன் ஊருக்கு ஒற்றுப்பிழை. வல்லினம் மிக வேண்டும் திரும்புவார்கள் என விளக்குகின்றன (Subramanian, 2008).

## ஊசல் விளையாட்டு

பரதவ மகளிர் பெரிய மரக் கிளைகளில் நீண்ட கயிற்றைக் கட்டி ஊசலை அமைத்து அதில் ஆடி மகிழ்ந்தனர். சுறா மீனின் கொம்புகளைக் கொண்டு பலகை செய்து தலைக்கு இருபுறமும் தாழை விழுதுகளால் கட்டி அதில் நெய்தல் பூவையும் சூட்டி ஊசலாடி மகிழ்ந்த நிகழ்ச்சி தெரியவருகிறது. இதனை விளக்குவதாகக் கலித்தொகையில்,

"எறி சுறா வான்மருப்பு கோத்து, நெறி செய்த

நெய்தல் நெடுநார்ப் பிணித்து யாக்கைதுளர்வின்

யாழினி கொண்ட இன வண்டு அமர்ந்து ஆர்பத்

தாழாது உறைக்கும் தடமலர்த் தண்தாழை

ஊசல் தூங்க பெறின்"

என்ற இவ்வடிகளில் அறிய முடிகின்றது (Subramanian, 2005).

## அலவன் ஆட்டம்

கடற்கரை பகுதிகளில் ஒதுங்கும் அலவன்களைக் கையில் பிடித்தும், ஆட்டியும் பெண்கள் விளையாடுவர். அலவன் என்பது ஞெண்டு என்றும் வழங்கப்படும். இப்போது இது நண்டு என்றே வழங்கப்பட்டு வருகிறது. இதிலேயே இவ்விளையாட்டையே அலவன் ஆட்டம் என்று அழைப்பர்.

"பல்மலர் வேய்ந்த நலிபெறு சோதயன்

திணிமணல் அடைகரை அலவன் ஆட்டி"

என்ற அகநானூற்றுப் பாடல் அடிகள் நெய்தல் நில இளமைகள் கடற்கரை ஓரங்களில் பொழுதுபோக்கிற்காக விளையாடியதை அறியமுடிகின்றது (Subramanian, 2005).

## விலங்கு மோதல் விளையாட்டு

வீர விளையாட்டில் ஒன்று இந்த விலங்கு மோதல் விளையாட்டாகும். ஆடுகளுடன் ஆடுகளையும், சேவலுடன் சேவலையும் பலர் முன்னிலையில் மோதவிட்டு பந்தயம் கட்டியும், பொழுதுபோக்கிற்காகவும் விளையாடினார்கள். இவ்விளையாட்டில் போட்டி மட்டுமே இருந்தது பொறாமை இல்லை, இதனை,

"மேழகத் தகரொடு சிவல் விளையாடக்

கிடுகு திரைக் தெஃகூன்றி"

இவ்வரிகள் காவிரிப் பூம்பட்டினத்துப் பரத வரது குழந்தைகள் தங்களது இல்லங்களுக்கு அருகிலேயே ஆட்டுக்கிடா மோதலையும் கவுதாரி மோதலையும் நடத்திக் கண்டு களித்து விளையாடி மகிழ்ந்தனர் என்பதனை எடுத்துக் காட்டுகிறது (Subramanian, 2005).

## பாவை விளையாட்டு

பாவை விளையாட்டு என்பது சிறிய, பசிய தாதுவால் பெண்கள் பாவை செய்து அப்பாவையைத்தான் ஈன்றெடுத்த குழந்தையைபோல் பேணி மணம் செய்வித்து விளையாடும் விளையாட்டாகும். இவ்விளையாட்டின் தன்மையே இது பெண்களுக்கு மட்டுமே உரியது என்பதை விளக்கும். இவ்விளையாட்டை பலர்கூடி விளையாடினர். என்பதை

“நெய்தல் பரப்பில் பாவை கிடப்பி

நின்குறி வந்தௌதன் இயல்பு கொண்ட

செல்கம் செலவியங் கொண்மோ அல்கலும்

ஆரல் அருந்த வயிற்ற

நாரை மிதிக்கும், என்மகள் நுதலே”

என்ற பாடல் வரிகள் விவரிக்கிறது (Arunachalam, 1976). மேலும் தலைவி தன் குழந்தையாகபாவித்து பாவையை வைத்து விளையாடினாள்என்பதை ‘என்மகள்’ என்று உரைப்பதன் மூலம் நாரை மிதிக்கும் என அஞ்சுவதால் உயிரற்ற ஒரு பொருளைக் கூட உயிரோட்டமானதாகக்கருதியதும் தன் உடமையைபாதுகாக்கும் பொறுப்பும் பெண்களிடம் இருப்பதை உணர முடிகிறது.

## ஓரை விளையாட்டு

ஓரை விளையாட்டு என்பது கடற்கரை மகளிர் கடற்கரையின் மணல்களிடையே தம்முள் ஓடிப்பிடித்து ஆடி மகிழும் ஒருவகை விளையாட்டு. ‘ஓர்தல்’ அடிப்படையாதலால் ஓரை எனப்பட்டது. ஓரை விளையாட்டு இன்றைய கண்ணாமூச்சி விளையாட்டோடு ஒப்பிடத்தக்கதாகும். குறுந்தொகையில்,

“அடும்பின் ஆய் மலர் விரைஇ நெய்தல்

நெடுந்தொடை வேந்த நீர்வார் கூந்தல்

ஓரை மகளிர் அஞ்சிஇ ஈர்ஞெண்டு

கடலில் பரிக்கும் துறைவனொடு ஒரு நாள்

தக்குவனை யாடாலும் கழந்தன்று

ஐதே கம்மஇ மெய்தோய் நட்பே”

என்ற பாடலடிகள் பரவத மகளிர் நெய்தல் மலரை நீண்ட மாலையாகச் சூடி நீர் ஒழுகும் கூந்தலுடன் ஓரை என்னும் விளையாட்டை ஆடும் பொழுது மகளிருக்கு அஞ்சி ஈரம் படிந்த நண்டானது கடலுக்குள் விரைந்து ஓடும் என குறிப்பிடப்பட்டுள்ளது (Arunachalam, 1976).

## வண்டல் விளையாட்டு

அடும்பின் பூக்களைக் கொய்து வயல்வெளிகளிலும், மணலிலும் மகளிர் விளையாடுவது வண்டல் விளையாட்டாகும்.

“கடல் உடன் ஆடியும் காணல் அழகியும்

தொடலை ஆயமொடு தீவு அணி அயர்ந்

நொதுமலர் போலக் கதுமென வந்து

முயல் மயங்கினேன் அன்று பண்ணேன்"

குறுந்தொகையின் இப்பாடலடிகள் நெய்தல் நில மகளிர் கடற்கரை மணலில் மாலைகளை அணிந்து தோழிகளுடன் குரவைக்கூத்தாடி விளையாடி மகிழ்ந்தனர் என்ற நிகழ்வை வெளிப்படுத்துகின்றது (Arunachalam, 1976).

## சிற்றில் இழைத்தல்

மணலில் வீடு கட்டி விளையாடும் விளையாட்டு சிற்றில் இழைத்தல் ஆகும். சிற்றில் என்பது சpறிa இல் எனப் பொருள்படும். மணலை மையமாக வைத்து இழைத்து வீடு கட்டி விளையாடியதை குறிக்கிறது. நெய்தல் நில மகளிர் கடற்கரையோரங்களில் மற்றும் தெருவோரங்களில் உள்ள மணலில் இவ்வாறு விளையாடினர். இதனை,

"இணைத்த தொகை பெருத்த சீனியர்

கடலாடு மகளிர் கானல் இழைத்த

சிறுமலை புணர்ந்து நட்பே தோழி

ஒரு நாள் துறைவன் துறை பின்

பல நாள் வரும் இன் அமைத்தது"

என்ற குறுந்தொகைப் பாடல் மூலம் அறிய முடிகிறது (Subramanian, 2005).

## முடிவுரை

சங்ககால ஆடவரின் விளையாட்டுகள் அவர்தம் வீரத்தை வெளிப்படுத்தும் விதமாகவும், பெண்டிரின் விளையாட்டுக்கள் அவர்களின் இல்லறக் குறிப்புகளையும் பொறுப்புணர்ச்சியையும் வெளிப்படுத்தும் விதமாகவும் அமைந்துள்ளன. நெய்தல் நிலத்தில் கடற்கரைச் சூழலிலே அலவன் ஆட்டம், ஊசல் விளையாட்டு, எண்ணி விளையாடல், நீர் விளையாட்டு, தாயக்கட்டம் ஆடல், சிற்றில் இழைத்தல் போன்ற விளையாட்டுக்கள் நெய்தல் நிலமக்களால் விளையாடப்பட்டுள்ளன.

## References

Arunachalam, M. (1976) Tamilar Veeravilaiyattu, Madurai Kamaraj University, Madurai, India.

Muthu Kannappan, T. (2005) Sanga illakkikyathil neithal, New Century Book House, Chennai, India.

Sivagama Sundari, (2005) Sanga illakkiya vilaiyattu, New Century Book House, Chennai, India.

Subramanian, S.V. (2005) Paathupattu, Koviloor madalayam, Koviloor, India.

Subramanian, S.V. (2008) Sanga Ilakkiyam Sila Paarvaigal, Paari niliyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0) © The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License